2014 டிசம்பர் 4] [பேரவைத் தலைவர்]

முல்லைப் பெரியாறு நீரின் காட்சியோ சமுத்திரம். மாண்புமிகு அம்மா அவர்களே, நீங்கள்தான் என்றும் சரித்திரம். (மேசையைத் தட்டும் ஒலி)

சிறப்பான இந்தத் தீர்மானத்தை வரவேற்று மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளோடு என்னுடைய உணர்வுகளையும் இணைத்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (5-12-2014) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 3-39 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 25-3-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 30-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

2. சென்னையிலுள்ள தமிழ்நாடு விற்பனை வரி மேல்முறையீட்டுத் தீர்ப்பாயத்தின் தலைவரை நியமித்தது குறித்து வணிகவரி மற்றும் பதிவு (இ2)த் துறையின் 13-6-2014 ஆம் நாளிட்ட அரசாணை (3டி) எண் 16-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின்

[2014 டிசம்பர் 4

(தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

3. 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு மது (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளுக்கு திருத்தங்கள் செய்தது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை(8)த் துறையின் 2-1-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1937 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

4. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளில் திருத்தம் செய்தது குறித்து 18-6-2014 ஆம் நாளிட்ட எண் த.மி.ஒ.ஆ./மி.நு.கு.தீ.ம.மி.கு./6-9-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 182 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

5. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவு (பி1)த் துறையின் 2-6-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 41-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 80(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

6. 2012-2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

1. 2014 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழக (திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 1/2014.)

2. 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2014.)